வந்ததே. அந்த நீலகிரி மாவட்டத்திலுள்ள பாலையாவது பவுடராக ஆக்க அங்கே பால்பவுடர் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க முன்வருவார்களா?''

டாக்டர் ஹாண்டே அவர்கள் தமக்கு முதலில் அளிக்கப் பட்டதாக கூறப்படும் விடையில் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சி நடந்தது 13—11—1971 முதல் 21—11—1971 வரை. தற்போது நடந்ததாக அமைச்சர் அவர்கள் கூறுவது 15—1—1973-ல். திரு. லத்தீப் அவர்கள், 1971-ம் ஆண்டு—இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்—நடந்த நிகழ்ச்சியை நினைவில் கொண்டு தம் துணைக் கேள்வியை கேட்டிருப்பார் என்று கருதுவதற்கில்லை. 1973-ம் ஆண்டு ஜனவரியில் நடந்த நிகழ்ச்சியைத் தான் அவர் கேட்டிருக்க வேண்டும். எனவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடை பொருத்தமானது, சரியானதும் ஆகும். மேலும், பேரவைக்கு 1971-ல் தானே அளித்த ஒரு விடையை மறுக்க வேண்டிய அவசியமும் அமைச்சருக்கு இல்லை. எனவே, இதில் அமைச்சர் தவறான தகவல்களைக் கொடுத்தார் என்பது சரியல்ல.

அவைக்கு வேண்டுமென்றே, தவறு என்று தெரிந்தும், அந்தத் தகவலை அளித்தால் அது அவையுரிமையை மீறிய செயலாகும் என்பதுதான் நமது அவையிலும், நாடாளு மன்றத்திலும் பல முறை கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பாகும். இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாம் அவைக்குக் கொடுத்த தகவல் தவறான தல்ல என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இதில் அவை உரிமை மீறல் நிகழ்ச்சி எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இணைக்கப்பட் டுள்ள முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைக் களங்கப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று கூறப்படுவது குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒரு உரிமைப் பிரச்னை.

The Hon. Member Thiru K. T. K. Thangamani has raised a matter of breach of privilege on the ground that in the reply to the rejoinder submitted to the Prime Minister of India by

Thiru M. G. Ramachandran, M.L.A. and Thiru M. Kalyanasundaram, M.P., the member has been described as one who has no qualms of conscience in attacking the Government for the very act which he had requested the Government to do and that such was the character and calibre of the persons who had brought charges against the Government.

When the matter was raised in the House, the Hon. Minister for Industries explained the position justifying the use of the passages against which the Hon. Member Thiru Thangamani had taken objection.

No doubt, any attack on an hon. Member of this House besmirching his character will be breach of privilege of the House, if such act of attacking the character was made in such a way as to impede the execution of his duties as a member of this House. In the present instance, the hon. Member Thiru Thangamani was a signatory to a petition submitted to the President of India in which certain charges have been levelled against some Ministers of the State Government. In repudiating those charges, the abovementioned passage had been written.

As already stated, breach of privilege will arise only if any defamatory statement is made against a member with reference to anything said or done inside the House. Admittedly in the present case the alleged passage was not used against the hon. Member Thiru Thangamani for his having supported the amendment to the City Tenants Protection Act or for his having given a requisition to pass such an amendment. Because he imputed motive elsewhere to the Government for having brought the same amendments which he had supported in the House, the abovementioned passage had been used against him.

I therefore hold that there is no breach of privilege.

அடுத்து, திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் 28-11-1973 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது உரிமைப் பிரச்னையை எழுப்பினார். அதற்கு என்னுடைய தீர்ப்பினை அளிக்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நவமணி மேல் எழுப்பிய உரிமைப் பிரச்னைக்கு பின்னால் வர இருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். முதலில் இதைப்பற்றி என்னுடைய தீர்ப்பை அளித்துவிடுகிறேன்.

இந்த நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன். என்னுடைய தீர்ப்பைக் கொடுத்ததற்குப் பிறகு உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புங்கள்.

(இ) உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன், தான் ஒருவருக்கு எழுதாத கடிதத்தை எழுதியதாக மாண்புமிகு முதல் அமைச்சர் பேரவையில் படித்தது குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 28—11—1973-ஆம் நாளன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள்.

27—11—1973-ஆம் நாளன்று, முதல் துணை மதிப்பீட்டின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உரை நிகழ்த்துகையில் ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டி, அது உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களால் எழுதப்பட்டது என்று கூறினார். அக்கடிதம் தன்னால் எழுதப்படவில்லையென்றும், தம் மீது களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற கருத்துடன் அவ்வாறு சாட்டப்பட்டுள்ளதென்றும் இப்பொழுது இந்த உரிமைப் பிரச்சனைக் கடிதத்தில் உறுப்பினர் திரு சௌந்தரபாண்டியன் அவர்கள் கூறுகிறார்.